**செய்தி வெளியீடு எண்: 684** **நாள்: 24.11.2011**

**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நெல் கொள்முதல், பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஆகிய விவசாயிகள் நலன் காக்கும், ஏழை எளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கிடும் திட்டங்களின் செயல்பாடு குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் சென்னை மண்டல அலுவலகத்தில் 24.11.11 காலை 10 மணியளவில் மாண்புமிகு தமிழ் நாடு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை செயலர் திரு.டி.என் இராமமாதன், இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. கா.பாலசந்திரன், இ.ஆ.ப.,, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,, அனைத்து மாவட்ட மண்டல மேலாளர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உணவுத் துறை அமைச்சர், தனது உரையில் குறிப்பிடுகையில், சாதனைக்குச் சொந்தக்காரர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6 நாட்கள் முன்னதாக 6.6.11 அன்றே மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசசத்திற்குத் தண்ணீர் திறந்து விட ஆணையிட்டதன் பயனாக டெல்டா மாவட்ட விவசாயிகள் கீழ்க்காணும் விதத்தில் பலனடைந்துள்ளனர்.

1. முன்னதாகவே பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் நடவு ,சாகுபடி பணிகளும் முன்னதாகவே நடைபெற்றது.
2. இந்த வருட மகசூல் இரட்டிப்பானதில் விவசாயிகள் அம்மாவுக்கு தங்கள் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறார்கள்.
3. வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே அறுவடை பணிகள் நிறைவு பெற்றது. இருப்பினும், ஒரு சில இடங்களில் மழை பெய்ததால் 17% முதல் 20% ஈரப்பதம்

வரை நெல் கொள்முதல் செய்ய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பலனாக விவசாயிகள், நேரடி கொள்முதல் நிலையங்களில் தங்கள் நெல்லை விற்று பயனடைந்தனர்.

4. அதிக மகசூல் தரக்கூடிய TKM 9 வகை நெல் 1.13 லட்சம் மெ.டன் கொள்முதல் செய்யப்பட்டது.
5. விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/-ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ. 70/-ம் வழங்கி ரூ.24.32 கோடி விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டதால் விவசாயிகள் இடைத்தரகர்கள், வியாபாரிகளை நாடிச் செல்லவில்லை.
6. ஒரு போக சாகுபடி மட்டுமே செய்து வந்த விவசாயிகள் தற்போது இரு போக சாகுபடி செய்து வருகின்றனர்.
7. கடந்த 10 ஆண்டுகளில் ஒரு சாதனையாக நடப்பு குருவைப் பருவத்தில் 4.94 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 30.11.11க்குள் இக்கொள்முதல் 5 லட்சத்தை கடந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் டெல்டா மாவட்ட விவசாயிகள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு காணிக்கையாக்குகிறார்கள். கொள்முதல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து மண்டல மேலாளர்களும் இனிவரும் காலங்களில் இப்பணி தொய்வின்றி சிறப்பாக அமைய அற்பணிப்பு மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பொது விநியோகத் திட்ட ஆய்வு குறித்துப்பேசிய அமைச்சர் அவர்கள் மாதம் ஒன்றுக்கு 3.21 லட்சம் மெ.டன் விலையில்லா அரிசி தமிழ்நாட்டிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி குடிமைப்பொருள் வழங்கல் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் கடத்தல் தடுப்புக் காவல் துறையினர் ஆகியோர் எடுத்த கடுமையான நடவடிக்கையின் காரணமாக ஜுன் 11 மாதத்தில் 3.46 இலட்சம் மெ..டன்னாக (90%) இருந்த அரிசி நுகர்வு அக்டோபர்' 11ல் 3.21

இலட்சம் மெ.டன்னாக (84% ) குறைந்துள்ளது. இருப்பினும் 26.9.11 அன்று சேலம் மாவட்ட அரிசி விநியோக கிடங்கிலிருந்து 30 மெ..ன் அரிசி கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டங்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் எடை குறைவின்றியும், தரமானதாகவும் இருப்பதை உறுதி செய்வதுடன், போலி பட்டியல்கள் தயார் செய்தல், இத்திட்டத்திற்கென வழங்கப்படும் அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கடத்துவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

மாவட்ட வழங்கல் அலுவலர்கள், போலி குடும்ப அட்டைகளைக் களைவதில் முனைப்புடன் செயல்படுவதுடன், அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றுகை இனங்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமென அறிவுறுத்தினார். இந்திய துணைக் கண்டத்திலேயே விலையில்லா அரிசி தந்து 1.94 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்குகின்ற ஒரே மாநிலம் புரட்சி தலைவி அம்மா ஆளுகின்ற தமிழகம் மட்டும்தான். எனவே இத்திட்டத்தினை செம்மையாக நிறைவேற்றி அம்மாவின் தலைமையின் கீழ் இயங்குகின்ற உணவுத்துறை சிறப்பாக செயல்பட அனைத்து அலுவலர்களும் அயராது பாடுபட வேண்டுமென அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தகவல் பரிமாற்றத்திற்கென மாவட்ட வழங்கல் அலுவலர் அரியலூர், வட்ட வழங்கல் அலுவலர் ஆத்தூர், தண்டராம்பட்டு, குறிஞ்சிப்பாடி, திருவெறும்பூர், குத்தாலம், கடலூர், மடத்துக்குளம், ஆம்பூர் ஆகியோருக்கு கைபேசி, சிம்கார்டு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**